**இலங்கை கைப்பணிகள் சபை - 2018**

---

## 1.1 மறுதலிப்பு அபிப்பிராயம்

இலங்கை கைப்பணிகள் சபையின் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்களின் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள், சாராம்சப் படுத்தியுள்ள முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளைக் கொண்டமைந்துள்ள 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனது அறிக்கையில் மறுதலிப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் கலந்துரையாடியுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக சபையின் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 மறுதலிப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவதின் அடிப்படையில் உண்மையானதும் நியாயமானதுமான நிலைப்பாட்டை பிரதிபலிக்காது என்பது எனது கருத்து.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது மறுதலிப்பதற்கான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக் கூற்றுகள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புடைய தரப்புகளதும் பொறுப்புகள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஆவதுடன், முகாமைத்துவமானது அதிகார சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் மற்றும் சயயின்

தொடர்ந்தியங்கும் தன்மைக்கு ஏற்புடையதான விடயங்களை வெளிப்படுத்தல் என்பவற்றுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயவெல்லை**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து சபையின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.
- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,
- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனத்தால் பேணிச்செல்லுதல்

அத்தியாவசியமாகும். பொது பேரேடு, நாட் குறிப்புகள், நாட் குறிப்பு வவுச்சர், செலுத்தல் வவுச்சர், ஆகிய பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்லுதல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் பின்வரும் தலைப்புகளின்கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியொழுகாமை

---

| கணக்காய்வு அவதானிப்பு | முாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 | பந்திக்கான நேரடி பதில் வழங்கப்படவில்லை. | நியமத்திற்கு அமைவாக நடவடிக்கை மேற்-கொள்ளுதல் வேண்டும். |
| (i) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01, நிதிக் கூற்றுகள் சமர்ப்பித்தல் தொடர்பான நியமத்தின் 32 ஆவது பந்தி பிரகாரம், சபையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அல்லது வருமானம் மற்றும் செலவினம் ஒவ்வொன்றுடன் பதிலீடு செய்வ-தற்கு முடியாதென அறிவிக்கப்ப-ட்டிருப்பினும், சபையால் 2018 ஆம் ஆண்டு திசெமப்ர் 31 ஆந் திகதியில் கிடைக்கப்பெற வேண்-டிய 08 கணக்குகளில் மொத்தம் ரூபா.32,208,102 மற்றும் செலுத்-தப்பட வேண்டிய 05 கணக்-குகளின் மொத்தம் ரூபா.32,208,102 ஆகிய பெறும-மதியினை 70401-00-00 ஆம் இலக்கம் கொண்ட, நீண்ட நாட்களிலான கடன் மீதி சீராக்கல் பேரேடு கணக்கினை பயன்படுத்தி, திறைசேரி அனுமதி பெற்றுக்-கொள்ளாது ஒன்றோடொன்று பதிலீடு செய்து நிதிக் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது. | | |
| (ii) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இல் நிதிக் கூற்றுகள் சமர்ப்பித்தல் தொடர்பான நியம-த்தின் 110 ஆவது பந்தி பிரகாரம் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன்படி கணக்கீட்டு தவறுகளை கடந்த காலத்திற்கு சீராக்குகையில், நிறுத்தி வைத்து கொள்ளப்பட்ட வருவாய் கணக்-கில் ஆரம்ப மீதிக்கு சீராக்-கப்படுதல் வேண்டுமாயினும், சபை 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உரிமை மூலதன மாற்றுக் கூற்று தயாரிக்கையில் ரூபா.178,017,763 ஆன வருமான ஒதுக்கத்தின் மொத்த பெறுமதி, நிறுத்தி வைத்தல் வருவாய் கணக்கின் ஆரம்ப மீதிக்கு சீராக்காது, வருமான | பந்திக்கான நேரடி பதில் வழங்கப்படவில்லை. | நியமத்திற்கு அமைவாக நடவடிக்கை மேற்-கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஒதுக்கமாக உரிமை மூலதன கூற்றில் புறம்பான நிரலில் சீராக்கப்பட்டிருந்தது. | | |
| (iii) மேற்படி நியமத்தின் 110 ஆவது பந்தி பிரகாரம் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன்படி கடந்த காலத்திற்கு ஏற்ற வகையில் சீராக்குகையில், கணக்கீட்டு கொள்கைகளின் வேறுபாடுகள் மற்றும் தவறுகளை செவ்வையாக்குவதன்மூலம் ஏற்ப-டும் விளைவுகளை உரிமை மூலதன மாற்றக் கூற்றில் வெவ்வேறாக வெளிப்படுத்தல் வேண்டுமாயினும், அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளாது 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் மொத்தம் ரூபா.139,836,768 ஆன வருமான ஒதுக்கம் சீராக்குதலாக குறிப்பிட-ப்பட்டு உரிமை மூலதன மாற்றக் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது. | பந்திக்கான நேரடி பதில் வழங்கப்படவில்லை. | நியமத்திற்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ)இலங்கை கணக்கீட்டு நியமம் 02 | | |
| இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 02, இருப்புகள் தொடர்பான நியமத்தின் 34 ஆவது பந்திபடி இருப்புகள் தொடர்பில் அடையாளம் காணப்பட்ட ரூபா.93,841,464 ஆன நட்டம் நியமத்தின் 36 (ஊ) பிரிவு பிரகாரம் நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | பந்திக்கான நேரடி பதில் வழங்கப்படவில்லை. | நியமத்திற்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 7 | | |
| இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இல் நியம இலக்கம் 16 (பி) பந்தி பிரகாரம், நிலையான சொத்துக்களை விற்பனை செய்வதன்மூலம் கிடைக்கப்பெற்ற பணமான ரூபா.242,132 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின்கீழ் வெளிப்ப-டுத்த வேண்டுமாயினும், அந்த பெறுமதி வரிக்கு முன்னரான இலாபத்தில் உள்ளடக்கப்பட்டு நிதிப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது. | பந்திக்கான நேரடி பதில் வழங்கப்படவில்லை. | நியமத்திற்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்விற்கான ஆண்டில் சபையால் SAP கணினிமயப்படுத்திய கணக்கீட்டு முறையில் பேணிச் சென்ற பணப் பேரேடில் நாட் குறிப்புகளை பயன்படுத்தி கொடுக்கல் வாங்கல்களை கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அதன்படி 7264 ஆம் இலக்க நடைமுறை கணக்கு பொருட்டு பேணிச் சென்ற பணப் பேரேடில் 24 நாட் குறிப்புகளை பயன்படுத்தி பற்று அல்லது வரவு மொத்த பெறுமதி ரூபா.7,155,350 ஆன கொடுக்கல் வாங்கல் கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன், 6526 ஆம் இலக்க நடைமுறை கணக்கிற்கு ஏற்புடையதான பணப் பேரேடில் 40 நாட் குறிப்புகளை பயன்படுத்தி பற்று அல்லது வரவு மொத்த பெறுமதி ரூபா.32,221,464 ஆன கொடுக்கல் வாங்கல் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | இவ்வாறான தவறுகள் எதிர் காலத்தில் ஏற்படாதிருப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பதில் படி செயலாற்றுதல் பொருத்தமாவதுடன், SAP மென்பொருளில் உள்ள குறைப்பாடுகளை தீர்க்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) 2018 ஆம் ஆண்டு திசெமப்ர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமைக் கூற்றுடனான பணிக்கொடை ஒதுக்கீடு அட்டவணைப்படி மொத்த பணிக்கொடை ஒதுக்கீடுகளின் பெறுமதி ரூபா.43,633,230 ஆயினும், அன்றைய திகதியில் பேரேடுபடி பணிக்கொடை ஒதுக்கீடுகளின் பெறுமதி ரூபா.43,319,441 ஆதல் காரணமாக பேரேடுபடி பணிக்கொடை ஒதுக்கீடு ரூபா.313,789 ஆல் குறைவாக குறிப்பிடப்பட்டிருந்தது. | பணிக்கொடை அட்டவணை ரூபா.43,316,441 ஆக செவ்வையாக இருப்பதால், அந்த அட்டவணை கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அது பேரேடுடன் ஒப்பிடுகையில் ரூபா.3,000 ஆன வேறுபாடு உள்ளதாக ஏற்றுக்கொள்கின்றேன். | வழங்கியுள்ள பதில் செவ்வையானதல்ல என்பதுடன், பதிலை பின்னாய்வு செய்கையில் பதிலில் குறைப்பாடுகள் உள்ளதென ஏற்றுக்கொள்வதுடன், செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் விசேட பொருட் கட்டளைகளின்மீது விற்பனை செய்கின்ற பொருட்களுக்கான செலவு ரூபா. 5,508,020 ஆன மொத்த பெறுமதி பொருட்டு SAP கணினி மென்பொருட்களுக்கு வழங்கியிருந்த குறைப்பாடுகளுடன்கூடிய கட்டளையிடல் காரணமாக, அந்தப் பெறுமதி | பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. | செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | விசேட பொருட் கட்டளைகளின்மீது விற்பனை கணக்கில் பற்று வைக்கப்பட்டிருந்தது. அந்த தவறினை செவ்வையாக்குவதற்கு மேற்கொண்டிருந்த நாட் குறிப்புகள் குறைப்பாடுகளுடன் காணப்பட்டதால் விற்பனை பொருட்களில் செலவின கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டிய ரூபா.5,508,020 ஆன பெறுமதி, விசேட கட்டளை பொருட்கள் களஞ்சிய இருப்புக் கணக்கில் பற்று வைக்கப்பட்டிருந்தது. இந்த குறைப்பாடுகளுடன்கூடிய நாட் குறிப்புகள் காரணமாக 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா.5,508,020 ஆல் விற்பனை பொருட்களின் செலவு கணக்கில் குறைவாக குறிப்பு வைக்கப்பட்டிருந்ததுடன், விசேட பொருட் கட்டளை களஞ்சிய இருப்புக் கணக்கினை அப் பெறுமதியால் அதிகரித்து குறிப்பு வைத்து நிதிக் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நிலுவை வரி அறிக்கை பிரகாரம், செலுத்தப்பட வேண்டிய வெட் வரி மீதி ரூபா.716,749 ஆயினும், நிதிக் கூற்றுகளில் செலுத்தப்பட வேண்டிய வரி பெறுமதி ரூபா.5,664,297 என்ற வகையில் குறிப்பு வைக்கப்பட்டதால் செலுத்தப்பட வேண்டிய வெட் வரி கணக்கின் மீதி ரூபா.රු.4,947,548 ஐ அதிகமாக குறிப்பு வைக்கப்பட்டிருந்தது. மேற்படி நிலுவை வரி அறிக்கை பிரகாரம், நிலுவை வெட் வரி பொருட்டு செலுத்தப்பட வேண்டிய அபராத பணத் தொகையின் மொத்தம் ரூபா. 1,877,463 ஐ மீளாய்விற்கான ஆண்டில் கணக்கு வைக்கப்படவில்லை. | கணக்கினை செவ்வையாக்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | பதில் பிரகாரம் நடைமுறைப்படுத்தல் பொருத்தமாகும். |

| | | |
|---|---|---|
| (உ) 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நிலுவை வரி அறிக்கை படி செலுத்தப்பட வேண்டிய தேசத்தை கட்டியெழுப்பும் வரி பெறுமதி ரூபா.5,383,496 ஆயினும், நிதிக் கூற்றுகளில் அந்த வரி பெறுமதி ரூபா.28,562,386 என்று குறிப்பு வைக்கப்பட்டதால் செலுத்தப்பட வேண்டிய தேசத்தைக் கட்டி-யெழுப்பும் வரி பெறுமதி ரூபா.23,178,890 ஆக அதிகமாக நிதிக் கூற்றுகளில் குறிப்பிடப்-பட்டிருந்தது. மேற்படி நிலுவை வரி அறிக்கை பிரகாரம், நிலுவை தேசத்தைக் கட்டியெழு-ப்பும் வரி பொருட்டு செலுத்தப்பட வேண்டிய அபராதப் பணத் தொகையின் மொத்தம் ரூபா.5,365,512ஐ மீளாய்விற்கான ஆண்டில் கணக்கு வைக்கப்படவில்லை. | கணக்கினை செவ்வையாக்-குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | பதில் பிரகாரம் நடைமுறைப்படுத்தல் பொருத்தமாகும். |
| (ஊ) 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நிலுவை வரி அறிக்கை பிரகாரம், செலுத்தப்பட வேண்டிய பொருளாதார சேவை வரி (ESC) மீதி ரூபா.2,926,736 ஆயினும், நிதிக் கூற்றுகளில் செலுத்தப்பட வேண்டிய அந்த வரி பெறுமதி ரூபா.23,332,443 என்று குறிப்பு வைக்கப்பட்டதால், செலுத்தப்பட வேண்டிய பொருளாதார சேவை வரி பெறுமதி ரூபா.20,405,707 ஆல் அதிகமாக நிதிக் கூற்றுகளில் குறிப்பிடப்ப-ட்டிருந்தது. மேற்படி நிலுவை வரி அறிக்கை பிரகாரம், செலுத்தப்பட வேண்டிய பொருளாதார சேவை வரி பொருட்டு அபராதப் பணத் தொகை மொத்தம் ரூபா.1,546,935ஐ மீளாய்விற்கான ஆண்டில் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கினை செவ்வையாக்-குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | பதில் பிரகாரம் நடைமுறைப்படுத்தல் பொருத்தமாகும். |

| | | | |
|---|---|---|---|
| (ளை) | 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நிலுவை வரி அறிக்கை படி, சபையால் செலுத்தப்பட வேண்டிய நிலுவை வரி மீதி ரூபா.22,387,108 ஆனதுடன். நிலுவை வரி மிகை கட்டணம் ரூபா.590,768 ஆகும். சபையால் முன்னரான ஆண்டுகளில் வருமான வரி மற்றும் மிகை கட்டணத் தொகை கணக்கி-டப்பட்டு கணக்கு வைக்கப்பட-வில்லை என்பதுடன், இந்த செலுத்தப்பட வேண்டிய வருமான வரி மற்றும் மிகை கட்டணம் பொருட்டு செலுத்தப்பட வேண்டிய அபராதப் பணம் ரூபா.2,481,404 ஆவதுடன், அந்த பெறுமதியும் செலுத்தப்பட வேண்டிய செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கினை செவ்வையாக்-குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | பதில் பிரகாரம் நடைமுறைப்படுத்தல் பொருத்தமாகும். |
| (ஏ) | 2018 ஆம் ஆண்டில் தேய்மானம் கணக்கிடுகையில் மொத்த பெறுமதி ரூபா.48,984,819 ஆன காணி மற்றும் கட்டிடங்களுக்கான தேய்மானம் கணக்கிடப்படா-மையால், மொத்தம் ரூபா.1,224,620 ஆன தேய்மானப் பெறுமதியை மீளாய்விற்கான ஆண்டில் குறைவாக கணக்கிடப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | கணக்கினை செவ்வையாக்-குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | கணக்கினை செவ்வை-யாக்குதல் வேண்டும். |
| (ஐ) | 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் பேரேடு கணக்குகளின் மீதி, கணக்கு அட்டவணைகள் மற்றும் நிதிசார் கூற்றுகளுடன் பரிசோதனை செய்கையில் 02 பேரேடு | பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. | கணக்குகளை செவ்வையாக்குதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கணக்குகளுக்கு ஏற்புடையதாக மொத்தம் ரூபா.718,258 ஐ நிதிக் கூற்றுகளில் அதிகமாக குறிப்பிடப்பட்டிருந்தது. | | |
| (ஒ) 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் பொருட் வழங்குநர்களிடத்தில் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக 05 கொள்வனவு நிலையங்களிடம் வழங்கியிருந்த மொத்தம் ரூபா.2,225,750 ஆன சீராக்கப்படாத முற்பணப் பெறுமதி நிதிசார் கூற்றுகளை தயாரிக்கையில் மொத்த கடன்தருநர்களின் பெறுமதியில் குறைவாக காட்டப்பட்டுள்ளதால், கடன் தருநர்களின் பெறுமதி குறைவாக நிதிக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. | பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. | கணக்குகளை செவ்வையாக்குதல் வேண்டும். |
| (ஓ) சபையிடம் 2015, 2016 மற்றும் 2017 கணக்கு ஆண்டுகளுக்கான கணக்காய்வு கட்டணங்களுக்கான இன்வொயிஸ் பத்திரம் வழங்குவதற்கு தேசிய கணக்காய்வு அலுவலகத்திடம் இணக்கம் தெரிவிக்காமையால் கணக்காய்வு கட்டணங்களுக்கான இன்வொயிஸ் பத்திரம் வழங்குவதற்கு இயலாதிருந்ததுடன், 2017 ஆம் ஆண்டில் கணக்காய்வு கட்டணமான ரூபா.1,568,717 ஆன கணக்காய்வு கட்டணத்திற்கான ஒதுக்கீடுகள் ஏற்பாடு செய்திருக்கவில்லை. | கணக்குகளை செவ்வையாக்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | கணக்குகளை செவ்வையாக்குதல் வேண்டும். |
| (ஔ) 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் 14 கண்காட்சி கூடங்கள் மற்றும் இருப்பு களஞ்சியங்களுக்கு ஏற்புடையதாக நிதிக் கூற்றுகளின்படி இருப்புகளின் பெறுமதி மொத்தம் ரூபா.434,008,464 ஆயினும், அந்தக் கண்காட்சி கூடங்கள் மற்றும் இருப்புக் களஞ்சியங்களில் பௌதீக இருப்புகளின் மீளாய்வு அறிக்கை படி மொத்தப் பெறுமதி ரூபா.433,284,445 ஆகியதால் நிதிக் கூற்றுகளில் இருப்பு ரூபா.724,019 ஐ அதிகமாக குறிப்பிடப்பட்டிருந்தது. | பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. | கணக்குகளை செவ்வையாக்குதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (க) மீளாய்வு சபை அறிக்கை மூலம் வருடாந்தம் வெளிப்படுத்திய இருப்புகளின் மிகை, பற்றாக்குறை நட்டங்கள் மற்றும் சேதங்கள் என்பவற்றுக்கு உள்ளான பொருட்களின் இருப்புகளை அடையாளம் காணப்பட்டு செவ்வைப்படுத்தாது, தொங்கல் கணக்கில் கொடுக்கல் வாங்கல்களை குறிப்பு வைக்கப்பட்டதால் அந்தக் கணக்கில் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா.93,841,464 ஆன பற்று மிகை காணப்பட்டது. அந்த பற்று மீதி முன்னரான ஆண்டின் சீராக்கல் கணக்கில் வரவு மீதிக்கு எதிராக பதிவழித்தல் காரணமாக, தொங்கல் கணக்கில் வரவு மீதி மற்றும் முன்னரான ஆண்டின் சீராக்கல் கணக்கில் வரவு மீதி நிதிக் கூற்றுகளில் ரூபா.93,841,464 ஆக குறைவாக குறிப்பிடப்பட்டிருந்தது. | பதில்மூலம் விடயங்களை தெளிவுபடுத்தல் மட்டும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | முன்அனுமதியின்றி கணக்கு வைக்கப்பட்ட நாட் குறிப்பு ஆவதுடன், பேரேடு கணக்கிற்கு மீண்டும் சீராக்கப்பட்டு தொங்கல் கணக்கினை கண்டறிந்து சீராக்குதல் வேண்டும். |
| (ங) 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் சபையின் இருப்புகள் தொடர்பாக 12 பேரேடு கணக்குகளில் மொத்த பெறுமதி ரூபா.38,441,797 ஆன இருப்பு மீதி, எழுத்திலான அனுமதியின்றி நாட் குறிப்புகளை பயன்படுத்தி முன்னரான ஆண்டின் சீராக்கல் கணக்கினை பற்று வைத்து பதிவழிக்கப்பட்டிருந்தது. ஆகையால் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் கூற்றுகளில் இருப்பு கணக்கின்மீது மற்றும் முன்னரான ஆண்டு சீராக்கல் கணக்கில் வரவு மீதி, அந்த பெறுமதியில் குறைவாக குறிப்பிடப்பட்டு நிதி கூற்றுகள் தயாரிக்கப்பட்டிருந்தன. | இதற்காக நேரடி பதில் வழங்கப்படவில்லை. 2011 ஆம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு ஆண்டுகளுக்கு ஏற்புடையதாக இருப்புகளின் ஏற்றத் தாழ்வில் பௌதீக ஆய்வுகளின்ஊடாக அடையாளம் காணப்பட்டது. அதன்படி கடந்த ஆண்டுக்கு ஏற்புடையதான சீராக்கல்களை ஏற்புடைய ஆண்டில் சீராக்காது முன்கொண்டு வரப்பட்டமையால் ஏற்பட்ட தாக்கத்தினை அகற்றப்பட்டு உண்மையான இருப்பு மீதிகளை அடையாளம் காணுவதற்கு, உரிமை மூலதன மாற்றங்களின் கூற்றில் வருமான ஒதுக்கமாக சீராக்கப்பட்டிருந்தது. | இந்த நாட் குறிப்புகள் முன்னரான அனுமதியின்றி கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன், பேரேடு கணக்குகளில் மீண்டும் சீராக்குதல் வேண்டும். |

### 1.5.4 தீர்க்கப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக் கூற்றுகளின் படி பெறுமதி ரூபா. | நேரொத்த அறிக்கை படி பெறுமதி ரூபா. | வேறுபாடு ரூபா | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| வங்கி கணக்குகள் | 3,428,033 | 5,138,010 | 1,709,977 | அறிக்கை திகதி வரை பதில் வழங்கவில்லை. | கண்டறிந்து கட்டுப்பாட்டு கணக்குகளை செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கு எழுத்திலான சான்றுகள் இல்லாமை

| விடயம் | பணம் ரூபா | வழங்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ)இரண்டாவது நிலையிலான முடிவுப் பொருட்கள் | 7,266,688 | ஆய்வு சபை அறிக்கை | இது தொடர்பாக கண்டறிந்து எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | சமர்ப்பிக்கப்படாத சாட்சிகளை கணக்காய்விடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ)கடன் அட்டைகளின் விற்பனை | 27,659,287 | பணம் அறவிடும் விபரங்கள் | பணியாற்தொகுதியில் நிலவிய குறைப்பாடுகள் காரணமாக ஒப்பிட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட முடியவில்லை. | சமர்ப்பிக்கப்படாத சாட்சிகளை கணக்காய்விடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ)தீர்க்கப்படாத முற்பணம் | 10,672,111 | மீதியினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு போதியளவு சாட்சிகள் | பந்திக்கான நேரடி பதில் வழங்கப்படவில்லை. | சமர்ப்பிக்கப்படாத சாட்சிகளை கணக்காய்விடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும் |
| (ஈ)வருமான வரி | 5,149,100 | வரி கணக்கிடும் அறிக்கைகள் மற்றும் வரி செலுத்தல் கடிதக் கோவைகள் | கம்பெனி தொடர்பாகவுள்ள வரி விகிதாசாரத்தின்கீழ் 25% ஆன வரிக்கான ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. | சமர்ப்பிக்கப்படாத சாட்சிகளை கணக்காய்விடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (உ)செலுத்தப்பட வேண்டிய கணக்குகள் | 41,217,749 | கடன் தருநர்களின் மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள், கடன் தருநர்களின் கடிதக் | பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன | சமர்ப்பிக்கப்படாத சாட்சிகளை கணக்காய்விடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கோவைகள், அட்டவணை மற்றும் கடன் தருநர்களின் மீதி, காலப் பகுப்பாய்வு | | |
| (ஊ) காணிகள் மற்றும் கட்டிடங்கள் | 644,834,974 | நிலையான சொத்துக்களின் பதிவேடு | பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. | சமர்ப்பிக்கப்படாத சாட்சிகளை கணக்காய்விடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (எ) SAP கணினி நிகழ்ச்சித்திட்டம் மூலம் தயாரிக்கப்பட்ட நாட் குறிப்புகள் | - | எழுத்திலான சாட்சிகளுடன் நாட் குறிப்புகள் | இந்த நாட் குறிப்புகள் கணினி முறைமையினூடாக உருவாக்கப்படுவதால் பிரதிகள் பெற்றுக்கொள்வதற்கு சிரமமாகும். | சமர்ப்பிக்கப்படாத சாட்சிகளை கணக்காய்விடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 1.6 கிடைக்கப்பெறுவனவைகளும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகளும்.

### 1.6.1. செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்விற்கான ஆண்டின் இறுதி திகதியில் மொத்தம் ரூபா.394,770,365 ஆன செலுத்தப்பட வேண்டிய வியாபார கடன் தருநர்களின் மீதிகள் 01 ஆண்டுக்கு குறைந்த மீதிகளின் மொத்தம் ரூபா.191,110,774 ம், 01 – 02 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட மீதிகளின் மொத்தம் ரூபா.63,377,660 ம், 02 – 03 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட மீதிகளின் மொத்தம் ரூபா.39,641,605 ம், 03 மற்றும் அதற்கு மேற்பட்ட மீதிகளின் மொத்தம் ரூபா.100,639,816 ம் ஆகியதுடன், இந்த நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டில் மேற்படி கடன் தருநர்களின் பெறுமதியில் ரூபா.160 மில்லி-யன் தொகை செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | எஞ்சிய செலுத்தப்பட வேண்டிய பொறுப்புகளை செலுத்தி சீராக்குதல் மற்றும் கணக்குகளுக்கு தேவையான சீராக்கல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை

---

| சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் தொடர் | இணங்கியொழுகாமை ரூபா | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2002 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி சட்டத்தின் III அத்தியாயத்தில் 21 (1)பிரிவு | ஒவ்வொரு வரி காலப் பகுதிக்கும் பெறுமதி சேர் வரி மீதான அறிக்கை-களை உள்நாட்டு இறைவரித் திணைக்க-ளத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், 2018 ஆம் ஆண்டில் சுப்பர் ப்ராண்ட் நில வாடகை வருமானம்மீது அறவிட-ப்பட்ட மொத்தம் ரூபா.465,750 ஆன வரித் தொகையினை அனுப்பி வைப்பதற்கும், வரி அறிக்கைகளை உள்நாட்டு இறைவரித் திணைக்க-ளத்திடம் அனுப்பி வைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | அறிக்கை திகதி வரை பதில் வழங்கப்படவில்லை. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) 2003 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரச தொழில் முயற்சி-கள் சுற்றறிக்கை (I) 5.1.3பிரிவு | பணிப்பாளர் சபை அங்கீகரிக்கப்பட்ட இணைந்த திட்டத்தின் இற்றைப்படுத்திய பிரதிகளை வரவு செலவு மதிப்பீட்டுடன் நிரல் அமைச்சு, அரச தொழில் முயற்சிகள் திணைக்களம், பொது திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் அதிபதியிடம் நிதி ஆண்டு ஆரம்பமாவதற்கு 15 நாட்களுக்கு முன்னதாக சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், 2018 – 2022 இணைந்த திட்டம் 2018 செப்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி பணிப்பாளர் சபை அங்கீகரித்து கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | அறிக்கை திகதி வரை பதில் வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (II) 4.2.6 பிரிவு | செயலாற்றுகை அறிக்கை தயாரித்து காலாண்டு முடிவடைவதற்கு 30 நாட்க-ளுக்கு முன்னர் சம்பந்தப்-பட்ட நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கப்படவில்லை. | அறிக்கை திகதி வரை பதில் வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 07 ஆந் திகதிய பீஈடீ 03/2018 ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை 2.2 மற்றும் 2.3 பிரிவு | வரைவு வருடாந்த அறிக்கை மற்றும் நிதி வெளியீடுகள் 60 நாட்க-ளுக்குள் கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாது, மொத்தம் ரூபா.2,160,000 ஐ செலுத்தப்பட வேண்டிய போனஸ் தொகையாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | அறிக்கை திகதி வரை பதில் வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவு**

சபையின் மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைவு ரூபா.16,441,514 ஆன இலாபம் காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் இலாபம் ரூபா.24,862,164 ஆகியது. அதன்படி நிதிசார் விளைவில் ரூபா.8,420,650 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு வருமானம் ரூபா.18,142,523 ஆல் குறைவடைதலும், 2018 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் அளிப்புகள் கிடைக்கப்பெறாமையும், வரிக்காக ரூபா. 5,149,100 ஆன ஒதுக்கீடு ஏற்பாடு செய்தலும் காரணமாகியிருந்தது.

**3. தொழில்பாட்டு மீளாய்வு**

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| கோட்டை லக்சல கட்டிடத்தை பழுதுபார்ப்பதற்காக அதனை தாபிக்கப்பட்டிருந்த பிரதான அலுவலகம் மற்றும் சபையின் ஏனைய பிரிவுகளை அகற்றப்பட்டு அவற்றை பேணிச் செல்வதற்கு கட்டிட வசதிகளை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அந்த வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட கட்டிடங்களை பழுதுபார்த்தல் மற்றும் கட்டிடங்களின் வாடகையாக 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் மொத்தம் ரூபா.38,340,318 ஐ செலுத்தப்பட்டிருந்தது. | தற்கால முகாமைத்துவம் வாடகைக்கு எடுத்த கட்டிடங்களை மீண்டும் கையளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. | சபையின் அலுவல்கள் பொருட்டு சபைக்குரிய காணிகள் மற்றும் கட்டிடங்களை பயன்படுத்துவதற்கும், வாடகை செலவுகளை குறைத்துக்கொள்வதற்கும் செயலாற்றுதல் வேண்டும். |

## 3.2 அடையாளம் காணப்பட்ட குறைப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2000 ஆம் ஆண்டு சனவரி மாதம் தொடக்கம் 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் வரை நிலுவை ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் மிகை கட்டணம் பொருட்டு மீளாய்விற்கான ஆண்டில் மொத்தம் ரூபா. 6,282,072 ஐ ஊழியர் சேமலாப நிதியத்திடம், மிகை கட்டணமாக செலத்தப்பட்டிருந்தது. | பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. | ஊழியர் சேமலாப நிதியமானது, அபராதம் மற்றும் வட்டிப் பணம் செலுத்தாது உரிய திகதியில் செலுத்து-வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2015 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி 1933/13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானிமூலம் சபைக்கு உரியதாக இருந்த அபேகம வளாகம் கல்வி அமைச்சிடம் கையளிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு பௌதீக சொத்து-க்களை கையளிக்கப்பட்டிரு-க்கையில், 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் தயாரிக்கப்பட்டிருந்த பரீட்சார்த்த சமன்பாட்டில் பற்று அல்லது வரவு பெறுமதியின் மொத்தம் ரூபா.43,829,223 ஆன அபேகமவிற்கு உரிய சொத்து-க்கள் மற்றும் பொறுப்புகள் மீதியும் அடங்கலாக 2018 ஆம் ஆண்டில், பரீட்சார்த்த சமன்பாடு தயாரித்து கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | இதற்கான பணம் திறைசேரியில் இருந்து கிடைத்ததும் இந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை அமைச்சிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | அபேகம வளாகத்திற்கு ஏற்புடையதான பேரேடு கணக்குகளின் மீதியை, சபையின் பரீட்சார்த்த சமன்பாட்டில் அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) சபை கணக்கு வைப்பதற்காக SAP கணினி மென்பொருளை பயன்படுத்துகின்றது. இந்த மென் பொருளை பயன்படுத்தல் தொடர்பாக ஊழியர்களை முறையாக பயிற்றுவிக்கப்பட-வில்லை. முறைமையின் பாதுகாப்பிற்காக Backup வைத்துக்கொள்ளப்படினும், தேவையான சந்தர்ப்பத்தில் அவற்றை மீண்டும் முறைமையில் உள்ளடக்குவதற்கான ஆற்றல் இருக்கவில்லை. SAP கணினி மென்பொருள் தொடர்பாக பிரதான கம்பெனியுடன் சேவை | அறிக்கை திகதி வரை பதில் வழங்கப்படவில்லை | சபை பயன்படுத்தும் SAP கணினி மென்பொருள் காலரீதியான தேவை-களின்மீது மேம்படுத்து-வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| உடன்படிக்கைகளை இற்றைப்படுத்தாமையால் மென்பொருள் பயன்படுத்தல் தொடர்பாக பாரிய இடர் நிலவியது. | | |
| (இ) 2018 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக தயாரிக்கப்பட்ட வரவு செலவு மதிப்பீடு, திருத்தம் செய்வதற்கு பணிப்பாளர் சபை ஆலோசனை வழங்கியுள்ளதுடன், அதன்படி வரவு செலவு மதிப்பீடினை திருத்தம் செய்து நடைமுறைப்படுத்தியிருப்பினும், திருத்தம் செய்த வரவு செலவு மதிப்பீடுக்காக அனுமதி கணக்கா-ய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை. | புறம்பான அனுமதி குறிப்பிடப்-படவில்லை என்பதுடன், வழங்கியுள்ள ஆலோசனை பிரகாரம் திருத்தம் செய்ய-ப்பட்ட வரவுசெலவு நடை-முறைப்படுகின்றது. | திருத்தம் செய்யப்பட்ட வரவு செலவு மதிப்-பீடுக்கு பணிப்பாளர் சபையின் எழுத்திலான அனுமதி பெற்றுக்-கொள்ளுதல் வேண்டும். |
| (ஈ) தொல்பொருள் பாதுகாப்பு சின்னங்களாக வெளியிட-ப்பட்டுள்ள கோட்டை லக்சல கட்டிடம் நவீனமயப்படுத்துவறத்கு கை வினை தொழில் சபையால் தொல்பொருள் திணைக்களத்தின் எழுத்திலான அனுமதி பெற்றுக்-கொண்டிருக்கவில்லை. அவ்வாறு அனுமதியின்றி ஆரம்பிக்கப்பட்ட நவீனமயப்படுத்தல் நடவடிக்-கைகள் இடையில் நிறுத்தியதன் காரணமாக கட்டிடம் அழிவுக்கு உட்படுகின்றது. | பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. | கோட்டை லக்சல கட்டிடத்தை பாதுகாப்-பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (உ) ரேஸ்கோஸ் கண்காட்சிகூடம் பொருட்டு செலுத்தப்பட வேண்டிய வாடகை பணத் தொகை நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் செலுத்து-வதற்கு நடவடிக்கை மேற்-கொள்ளாமை காரணமாக 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 18 ஆந் திகதி அந்த கண்காட்சி கூடத்தை முத்திரை வைக்கப்பட்டது. அந்த கண்காட்சிகூடத்தை அபிவிருத்தி செய்வதற்காக 2013 ஆம் ஆண்டில் ரூபா.1,113,613 பணம் செலவிடப்பட்டிருந்ததுடன், நிலுவை வாடகை பணம் செலுத்தாமை காரணமாக சட்டத்-துடனான நடவடிக்கை மேற்-கொள்வதாக குறிப்பிடப்பட்டு எழுத்தில் அறிவிக்கப்பட்டிருப்பினும், சபை இது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை. | பந்திக்கான முழுமையான பதில் வழங்கப்படவில்லை என்பதுடன், விடயங்களை தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. | நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்துடனான நடவடிக்கை மேற்-கொள்வதாக அறிவிக்கப்-பட்டுள்ளதால் இது தொடர்பாக கண்டறிந்து தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஊ) 2015 ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் மொத்தப் பெறுமதி ரூபா.6,770,488 ஆன பொருட் இருப்புகள் கண்காட்சி கூடத்தின் விற்பனையிலிருந்து அகற்றப்பட்டி-ருந்தது. 2018 ஆம் ஆண்டில் மட்டும் அகற்றப்பட்ட இருப்பு-களின் பெறுமதி ரூபா.2,060,754 ஆகியது. இந்த இருப்புகள் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் அவ்வாறு விற்பனை செய்ய முடியாத இருப்புகளை குறைத்துக்கொள்வதற்கும் தேவையான நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | இந்த இருப்புகள் தொடர்பாக எதிர்வருங் காலத்தில் தாமதமின்றி கண்டறிந்து விற்பனை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | கணக்காட்சி கூடத்தின் விற்பனை இருப்புகளில் அகற்றப்படும் பொருட்களை குறைத்துக்கொள்வறத்கும், சேதமடைந்த பொருட்கள் தொடர்பாக பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட் இருப்புகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்-வதற்கும் செயலாற்றுதல் வேண்டும். |

## 3.4 தொழில்பாட்டு வினைத்திறனின்மை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் அபிப்பிராயம்** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) மீளாய்விற்கான ஆண்டில் எதிர் பார்க்கப்பட்ட நிறுவனத்தின் விற்பனை புரள்வு ரூபா.50,000,000 ஆயினும், உண்மையான விற்பனை ரூபா.14,960 ஆகியதால் அந்த விற்பனை இலக்குகளை அடைந்துக்கொள்ளும் முன்னேற்றம நூற்றுக்கு 0.03 ஆகியது. | அறிக்கை திகதி வரை பதில் வழங்கப்படவில்லை | திட்டமிடப்பட்ட இலக்-குகளை அடைந்துக்-கொள்வதற்கு முகாமை-த்துவம் செயலாற்றுதல் வேண்டும். |
| (ஆ) விற்பனை அதிகரிப்பதற்கு 250 புதிய வழங்குநர்களை பதிவு செய்தலும், கை வினை தொழிலின் உற்பத்தியை நேரடியாக கொள்வனவு செய்வதற்கு 25 கை வினை கிராமங்களை ஆரம்பித்தலும் இலக்காகக் கொண்டிருந்ததுடன், மீளாய்விற்கான ஆண்டில் 97 வழங்குநர்களை பதிவு செய்தலும், 05 கைவினை கிராமங்களை ஆரம்பித்தலும் மேற்கொள்ளப்ப-ட்டிருந்தன. அதன்படி அந்த நோக்கங்களை அடைந்துக் கொள்ளும் பௌதீக முன்னேற்றம் ஒழுங்குமுறையாக நூற்றுக்கு 39 மற்றும் 20 ஆகியது. | அறிக்கை திகதி வரை பதில் வழங்கப்படவில்லை | திட்டமிடப்பட்ட இலக்-குகளை அடைந்துக்-கொள்வதற்கு முகாமை-த்துவம் செயலாற்றுதல் வேண்டும். |
| (இ) மீளாய்விற்கான ஆண்டில் புதிய 2 கண்காட்சி கூடங்களை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டி-ருப்பினும், ஆண்டில் புதிய கண்காட்சி கூடங்களை ஆரம்பிப்பதற்கு முடியவில்லை. | அறிக்கை திகதி வரை பதில் வழங்கப்படவில்லை | நிறுவனத்தின் கால ரீதியான தேவைகள் மற்றும் நிதிசார் ஆற்றலை அடையாளம் காணப்பட்டு, திட்டமிடுதல் வேண்டுமென்-பதுடன், தயாரிக்கப்பட்ட திட்டங்கள்படி செயலாற்-றுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) மீளாய்விற்கான ஆண்டில் சனவரி மாதம் தொடக்கம் செப்தெம்பர் மாதம் வரையிலான காலப் பகுதியில் சபையால் ஆரம்பிக்க-ப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 23 நோக்கங்களை சம்பந்தப்பட்ட காலப் பகுதியினுள் நடைமுறைப்ப-டுத்தியிருக்கவில்லை. | அறிக்கை திகதி வரை பதில் வழங்கப்படவில்லை | நிறுவனத்தின் கால ரீதியான தேவைகள் மற்றும் நிதிசார் ஆற்றலை அடையாளம் காணப்பட்டு, திட்டமிடுதல் வேண்டுமென்-பதுடன், தயாரிக்கப்பட்ட திட்டங்கள்படி செயலாற்-றுதல் வேண்டும். |

## 4. கணக்கீட்டு நெறிமுறைகளும் நள்ளாளுகையும்

### 4.1 நிதிக் கூற்றுகள் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டு 19ம் இல தேசிய கணக்காய்வு சட்டத்தில் III ஆவது பகுதி 16 (2) பந்தி மற்றும் 2003 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆந் திகதி பீஈடீ 12 ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையில் 6.5.1 பிரிவு பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுகள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், சபையின் 2018ம் ஆண்டின் நிதிக் கூற்றுகள் 2019 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆந் திகதி கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | அறிக்கை திகதி வரை பதில் வழங்கப்படவில்லை | சுற்றறிக்கை பிரகாரம் உரிய திகதியில் நிதிசார் கூற்றுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 4.2 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்விற்கான ஆண்டில் 20 உள்ளக கணக்காய்வு ஐயப்பாடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன், நிறுவனம் அந்த கணக்காய்வு ஐயப்பாடுகளில் 03 இற்கு மட்டு பதில் வழங்கியிருந்தது. அதன்படி நிறுவனத்தில் உள்ளக கணக்காய்வு பிரிவினை பயனுள்ளவாறு உயர் முகாமைத்துவத்தால் முகாமை-த்துவம் மற்றும் நிருவாக நடவடிக்-கைகளின் பொருட்டு பயன்படுத்தியிரு-க்காமை அவதானிக்கப்பட்டது. | அறிக்கை திகதி வரை பதில் வழங்கப்படவில்லை. | உள்ளக கணக்காய்வு ஐயப்பாடு தொடர்பாக கண்டறிந்து அந்தப் பிரச்சினைகளை செவ்வையாக்குவதற்கு முகாமைத்துவம் நடவ-டிக்கை மேற்கொள்-ளுதல் வெண்டும். |